## ACTION PLAN TO CONSERVE ENERGY IN TIRUPUR TEXTILE PROCESSING UNITS

# ஆற்றல் சேமிப்பு நுட்பத்தை செயல்படுத்த முனைப்பு

**திருப்பூர் • நவ. 14-**
ஆற்றல் சேமிப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தி, ஆடை தயாரிப்பு நிறுவனங்களின் செலவினங்களை கட்டுப்படுத்த, தொழில்பாதுகாப்புக் குழு முடிவு செய்துள்ளது.

திருப்பூரில், உள்நாட்டு, ஏற்றுமதி ஆடை தயாரிப்பு நிறுவனங்கள், நிட்டிங், டையிங், பிரின்டிங், காம்பாக்டிங் என, பல்வேறு ஜாப் ஒர்க் நிறுவனங்கள் இயங்குகின்றன.

இந்நிறுவனங்களில் ஆடை தயாரிப்பு பணிக்காக, வெவ்வேறு வகையான மெஷினரிகள் பயன்படுத்தப்படுகிறது. இவற்றின் இயக்கத்துக்கு, மின்சாரம் மிக அவசியமாகிறது.

சாய ஆலை போன்ற ஒரு சில துறைகளில், விறகு, நிலக்கரி போன்ற எரிபொருட்கள் பயன்படுத்தப்படுகிறது. வர்த்தக போட்டிகளை எதிர்கொள்வதற்காக, உற்பத்தி செலவினங்களை குறைக்கும் நடவடிக்கைகளில், தொழில்துறையினர் முனைப்பு காட்டி வருகின்றனர். நிறுவனங்களில், மின் ஆற்றல், எரிபொருள் அதிகளவு வீணடிக்கப்படுகிறது. இதுகுறித்து எவ்வித தணிக்கையும் செய்யப்படுவதில்லை; அதனால், செலவினங்களை கட்டுப்படுத்துவது கேள்விக்குறியாக உள்ளது.



இப்பிரச்னைக்கு தீர்வாக, நிறுவனங்களை ஆற்றல் தணிக்கைக்கு உட்படுத்தவும், ஆற்றல் சேமிப்பு நுட்பங்களை பரவலாக்கவும் முடிவு செய்துள்ளது. இதற்காக, தேசிய உற்பத்தி திறன் குழுவின் முன்னாள் இயக்குனர் தர்மலிங்கம், திருப்பூரில் ஆய்வு நடத்தினார். ஆடை தயாரிப்பு சார்ந்த மூன்று நிறுவனங்களை பார்வையிட்டார்.

நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் மெஷினரி, கம்ப்ரஷர் வகைகள், எவ்வகையான எரிபொருள் பயன்படுத்தப்படுகிறது என்ற விவரங்களை சேகரித்தார். அதன் தொடர்ச்சியாக, வல்லுனர்களை கொண்டு, ஆடை தயாரிப்பு, ஜாப் ஒர்க் நிறுவனங்களில் ஆற்றல் விரையமாவது குறித்து ஆய்வு செய்யப்பட உள்ளது; எந்தெந்த நிறுவனத்தில் என்னென்ன வகைகளில் மின், எரிபொருள் ஆற்றல் வீணடிக்கப்படுகிறது என்பதை கண்டறிந்து, மாற்றங்கள் செய்து, ஆற்றல் சேமிப்பை, உறுதி செய்ய உள்ளனர்.

தொழில் பாதுகாப்புக்குழு நிர்வாகிகள் கூறியதாவது:

பின்னலாடை நிறுவனங்களில், கண்ணுக்கு தெரியாமல் மின்சாரம், எரிபொருள் போன்றவற்றின் ஆற்றல்கள் வீணடிக்கப்படுகின்றன. புதிய சாதனங்களை பொருத்துவது, மெஷின்களை மாற்றுவது போன்ற மாற்றங்கள் மூலம், இதனை சரிசெய்து, எளிதாக ஆற்றல் விரையத்தை தடுத்து, செலவினத்தை கட்டுப்படுத்த முடியும்.

ஆற்றல் சேமிப்பு நுட்பங்களை செயல்படுத்த, முதல் கட்டமாக, ஆற்றல் சேமிப்பு தணிக்கை அவசியம். இந்த தணிக்கைகள் நடத்துவதற்கு, அரசு மானியமும் வழங்கப்படுகிறது. இந்த நுட்பங்களை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்காகவே, தேசிய உற்பத்தி திறன் குழு முன்னாள் இயக்குனரை நியமித்துள்ளோம்.

தொடர் ஆய்வுகள் நடத்தி, நிறுவனங்களை, ஆற்றல் சேமிப்பு வளையத்துக்குள் கொண்டு வருவோம். இதன் மூலம், சிறப்பான வர்த்தக முன்னேற்றத்தை நோக்கி பயணிக்க முடியும்.

இவ்வாறு, அவர் கூறினார்.

## MOU SIGNED BETWEENSIKKIM MANIPAL INSTITUTE OF TECHNLOGY &ENSAVE CONSULTANCY AND TRAINING PVT LTD FOR ENERGY AUDIT AND TRAINING PROJECTS.

